1978 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : கேட்கப்பட்டிருக்கும் கேள்வி மூங்கில் வளர்ப்பைப் பற்றியது. மேற்கொண்டு விவரங்கள் இல்லை. என்றாலும் இது சம்பந்தமாக எனக்குத் தெரிந்த மற்ற குறிப்புகளைக் கூறுகிறேன். அரசாங்கத் தோட்டங்களிலே இருக்கும் மூங்கில்கள் தனியாருக்குக் குத்தகை என்ற பெயரில் விடப்பட்டால், அவற்றைத் தனியார் வெட்டு கிறார்கள். இல்லையென்றால், காகிதம் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு வெட்டு கிறார்கள் என்பது இருக்கும் நிலைமை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மூங்கில் அநேகமாகக் காடுகளில் வளர் கிறது. இது திட்டமிட்டு வளர்க்கப்படுகிறதா? அல்லது தானாக வளர் கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதுவரை திட்டமிட்டு வளர்க்கப் படுவதாக விவரமில்லை. இனிமேல் அதற்கான முயற்சிகளை ஆராய வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

Filmotsav Film Festival

* 32 *Q.*—THIRU KU. MA. BALASUBRAMANIAM (on behalf of THIRU V. THANGAPANDIAN): Will the Hon. the Minister for Information and Hindu Religious Endowments be pleased to state the expenditure met by the Tamil Nadu Government out of the expenses for Filmotsav Film Festival held in Madras City, during January, 1978 ?

சர்வதேச திரைப்பட விழா

திரு. கு. மா. பாலசுப்ரமணியம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு செய்தி, இந்து அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினா விற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1978 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் சென்னையில் நடைபெற்ற சர்வ தேச திரைப்பட விழாவிற்கான செலவில், தமிழ்நாடு அரசு எவ்வளவு தொகை ஏற்றுக்கொண்டது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தமிழ்நாடு அரசு ரூ. 1,56,000 செலவை ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. கு. மா. பாலசுப்ரமணியம்: விழாவிற்கான இவ்வளவு தொகையை தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொண்டிருந்தும்கூட, இந்த விழாவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனிச் சலுகை காட்டி, டிக்கட்டுகள் அளிக்கப்படவில்லை.

சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று, கூட்டத்தில் இடிபட்டு, டிக்கட் கிடைக்காமல் ஏமாற்றமடைந்தார்கள் என்பதை அரசு அறியுமா? இனியாவது இப்படிப்பட்ட விழாக்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இத்தனை டிக்கட்டுகள் கொடுக்கப்படுமென்ற நியதி வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று 5 சதவிகித நுழைவுச் சீட்டுகளை அங்கே விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அங்கே முன்னாலே யார் வந்தார்களோ அவர்களுக்கு, ஒரு நபருக்கு இரண்டு டிக்கட்டுகள் என்று விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதையும் மீறிக் கேட்டவர்களுக்கும், பின்னால் வந்தவர்களுக்கும் டிக்கட் கிடைக்காத சங்கடம் இருந்ததென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன் : சென்னையில் திரைப்பட விழா நடைபெற்ற அன்று, தலைவரவர்களே, நீங்கள் இப்போது தலைமை வகிப்பது போன்று, நானும் அன்று இந்த அவையில் தலைமை வகித்திருந்தேன். அன்று சட்ட மன்றத்தை ஒரு மணி நேரம் முன்னதாக முடித்துக்கொண்டு, நேராக அங்கே போனேன். அங்கே போன பிறகுதான் நுழைய முடியாதென்ற நிலை தெரிந்தது. எனவே எதிர்காலத்தில் இப்படிப்பட்ட விழாக்களுக்கு, உறுப்பினர்களுக்கான அனுமதிச் சீட்டை முதலிலேயே அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இது அகில உலக அளவில் நடைபெற்ற விழா. எனவே கலைவாணர் அரங்கத்தில் தொடக்க விழா நடந்தது. கலைவாணர் அரங்கம் 1,050 இருக்கைகள் கொண்டது. எனவே விழாவின் முன் அழைப்பை அனுப்பி, ஒவ்வொருவரிடமும் நீங்கள் வருகிறீர்களா என்று கேட்டிருந்தார்கள். அதற்கு ஒப்புதல் தந்தவர்களுக்கு மாத்திரம் அந்த நாளன்று, அங்கே கலந்துகொள்ளும் அழைப்பு அனுப்பப்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம்: அகில உலகத் திரைக் கண்காட்சி இங்கு நடைபெற்றதால், இவ்வரசு 1,56,000 ரூபாய் செலவிட்டதென்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த விழா, நமது மாநிலத் திரைப்படத் தொழிலுக்கு எவ்வாறு பயனுடையதாக இருந்ததென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அகில உலகத் திரைப்பட விழா தமிழகத்தில் நடைபெற்றதன் மூலம், தென் இந்திய திரைப்படங்களை, குறிப்பாக தமிழ்த் திரைப்படங்களை உலக நாடுகளிலே இருந்து வந்த பிரதிநிதிகள் பார்க்கவும், அவைகளைப்பற்றித் தெரிந்துகொள்ளவும் வாய்ப்பு

1978 செப்டம்பர் 7]

ஏற்பட்டிருக்கிறது. இது வியாபார முறையிலே. நம்முடைய நாட்டு தொழில் நிபுணர்கள், அந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் உலக நாட்டுப் படங்களைப் பார்த்து, தொழில் நுட்பத் திறன்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : உலகத் திரைப்பட விழாவில் பால் உணர்வு அதிகமாக இருக்குமென்று, அப்படங்களைப் பார்க்கப் பேரார்வம் கொண்ட மக்கள், எதிர்பார்த்த அளவுக்கு பாலுணர்வு இல்லாததால், ரகளை செய்து, தியேட்டர்களுக்குச் சேதமிழைத்ததாகச் சொல்லப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானல் சேதமடைந்த தியேட்டர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் நான் பார்த்தேன். அப்படி எதுவும் நஷ்ட ஈடு தியேட்டர் அதிபர்களுக்குத் தரப்படவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : 'எதிர்பார்த்த அளவிற்குப் பாலுணர்வு' என்பதற்கு விளக்கம் சொன்னல் நன்றாக இருக்கும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : நான் அந்தப் படங்களைப் பார்க்கவில்லை. எனக்கு அதைப்பற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : உலகத் திரைப்பட விழாவில் வெளிநாட்டுப் படங்கள் வெளியிடப்பட்டன. பல சினிமாக் கொட்டகைகளில் அந்தப் படங்களுக்கு அனுமதிச்சீட்டுகள் வழங்கப்பட்டன. சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, இரண்டு அனுமதிச் சீட்டுகள்—எழுதிக் கேட்பவர்களுக்குக் கொடுப்பதற்காக, ஒதுக்கப்பட்டிருந்தது. என்னிடம் இரண்டு நண்பர்கள் கேட்டார்கள். நான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். ஆனல் அனுமதிச் சீட்டு மறுக்கப்பட்டதென்று அவர்கள் சொன்னர்கள். இது போன்று பல உறுப்பினர்களுக்கு அனுமதிச் சீட்டு மறுக்கப்பட்டதென்ற செய்தி வந்தது. இது பற்றி யாராவது புகார் செய்தார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இது போன்ற கேள்விக்குத் தான் முன்னல் நான் பதில் சொன்னேன். ஏன் உறுப்பினர்களுக்கு உண்மையிலேயே கிடைக்காமல் போயிற்று என்பதற்கு மாண்புமிகு உறுப்பினரவர்களே காரணத்தைத் தெரிவித்துவிட்டார்கள். தாங்கள் பார்க்க முடியவில்லை என்றாலும், யாருக்கோ என்டார்ஸ் பண்ணிக் கொடுத்ததால்தான், பார்க்க வந்த உறுப்பினர்களுக்குக்கூட இடமில்லாமல் ஆகி உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் மூலம், கேள்வி கேட்ட உறுப்பினர் திரு. கு. மா. பாலசுப்ரமணியம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : நான் சொல்லுவது கலைவாணர் அரங்கத்தில் நடந்த விழாவைப் பற்றியதல்ல. சினிமாக் கொட்டகைகளில் நடந்த விழாபற்றிச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதைத்தான் நான் சொன்னேன். ஐந்து சதவிகிதம் டிக்கட்டுகள் உறுப்பினர்களுக்காக ஒதுக்கி வைத்திருந்தோம். ஒரு நபருக்கு இரண்டு டிக்கட்டுகள் கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது. யார் முன்னால் வருகிறார்களோ அவர்களுக்குத் தர முடிவு செய்து, அப்படி வழங்கப்பட்டது. நியாயமாகப் பார்க்க வேண்டியவர்கள் வந்து டிக்கட்டுகளை வாங்கியிருந்தால், நியாயமாகக் கிடைத்திருக்கும். ஆனால் அப்படியில்லாமல், யார் யாருக்கோ எழுதிக் கொடுத்தால், முன்னாலே வந்த யாரோ வாங்கிக்கொண்டு போக, உண்மையிலேயே பார்க்க வந்த உறுப்பினர்களுக்கு டிக்கட் கிடைக்கவில்லை.

(பிற்பகல் 4-10)

THIRU J. M. MIAKHAN: Mr. Vice-Chairman, may I know why so much of interest is being shown to see these foreign films and why our legislators should be so very anxious to see those foreign films? Is there anything special in them?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அதற்கு உறுப்பினர்தான் பதில் சொல்ல வேண்டும்.

Tamil Nadu Graduate Teachers' Association

* 33*Q*.—THIRU P. R. THOMAS & C.R. LAKSHMIKANTHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Graduate Teachers' Association has sent any representation to the Government for treating the period of absence, from duty, of the Graduate teachers, during their agitation in March 1973, as on special casual leave; and

(*b*) if so, the action taken thereon?

தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் சங்கம்

திரு. பி. ஆர். தாமஸ் & திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்டதாரி ஆசிரியர்கள் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடத்திய போராட்டத்தின் போது வேலைக்கு வராமல் இருந்த நாட்களைச் சிறப்புத் தற்செயல் விடுப்பாகக் கருதுமாறு கேட்டு கோரிக்கை எதனையும் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், அரசுக்கு அனுப்பி உள்ளதா?